பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 15 திங்கட்கிழமை /30-12-1991/ UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 34

# இனக்கலவர ஆபத்து தெற்கில் உருவாகிறது!

## பின்னணியில் எதிர்க்கட்சிகள்

கொழும்பு, டிசம்பர் 30

தென்னிலங்கையில் இனக்கலவரம் வெடிக்கும் ஆபத்தான நிலை உருவாகி வருவதாக அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த யோசனைகளைச் சாட்டாக வைத்து தெற்கில் உள்ள இனவாத அமைப்புகளும், சிங்கள தேசியவாத இயக்கங்களும் இனத்துவேசத்தைத் தூண்டும் விதத்தில் விஷமப் பிரசாரம் செய்து வருகின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழருக்கு எதிரான கலவரத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்தும் முயற்சியில் எதிர்க்கட்சிகள் பலவும் பின்னணியில் நின்று செயற்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானின் யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட குறைந்தபட்ச சுயாட்சி அமைப்பை தமிழீழ அரசின் அத்திவாரம் என்று சிங்களப் பேரினவாத சக்திகளும், பௌத்த அமைப்புகளும் விஷமப் பிரசாரம் செய்து வருகின்றன.

வடக்கு-கிழக்குத் தமிழரும், மலையகத் தமிழரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



கவச வாகனங்களைக் கொண்டு, வயல் உழுகிறவம் போலை...!

## பூநகரியில் கவசவாகனங்கள் வயல் நிலங்களில் 'பவனி'!

பூநகரியில் குறிப்பிட்ட சில பகுதிகளில் — வயல்களின் ஊடாக — ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கவச வாகனங்களில் ஓடித் திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூநகரிப் பகுதிக்கு இராணுவம் வந்ததால், பல நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களில் இருந்து பெறக்கூடிய வருமானத்தை அப்பகுதி மக்கள் இழந்துள்ளனர்.

இதேசமயம், ஞானி மடத்சந்தியில் இருந்து செட்டியா குறிச்சி வரையில் இருந்த வீடுகள் சிலவற்றைப் படையினர் தகர்த்து விட்டனர் என்றும், உடைமைகள் பலவும் சூறையாடப்பட்டுவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## பேச்சு நடந்தாலும் யுத்தம் தொடருமாம்!

கொழும்பு, டிச. 30

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சாத்திய நிலை உருவாகி, அது நடந்து கொண்டிருந்தாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது யுத்தத்தை தாம் தொடர்ந்து நடத்தப் போவதாக இராணுவத் தரப்பினர் கூறியுள்ளனராம்.

ஏஜென்சிச் செய்தி ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டது.

போர் நிறுத்தம் ஏற்பட்டால் உருவாகும் கால இடைவெளியை விடுதலைப் புலிகள் நன்கு பயன்படுத்தி மீண்டும் போருக்குத் தயாராகி விடக்கூடும் என்று இராணுவம் அஞ்சுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [அ-எ]

### திருகோணமடுவில் மோதல்

கொழும்பு, டிச, 30

பொலன்னறுவ மாவட்டம் திருகோணமடு பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் இடம்பெற்றதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## தொண்டா யோசனையை நிராகரிக்க பிரேமாவிடம் பிக்குமார் வற்புறுத்து

கொழும்பு, டிச. 30

அமைச்சர் தொண்டமானின் யோசனைகளை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று கடந்த வாரம் கண்டியில் நடைபெற்ற பௌத்த மதக் கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் குறித்துப் பிரஸ்தாபிக்கையில், பிரபல பௌத்த மத குருவான வண. ரம்புக்வல விபஸி தேரர் சொன்னதாவது;-

தொண்டமானின் யோசனைகள் நாட்டிற்கு ஒவ்வாதவையாகும்.

நாம் அதனை முழுமையாக எதிர்க்கிறோம். இருபது லட்சம் தமிழருக்கு வடக்கு-கிழக்கு மாகாணத்தைத் தாரை வார்க்கும் முயற்சியாக தொண்டமானின் யோசனை அமைந்துள்ளது. நாட்டை இது நிச்சயம் பிளவுபடுத்தும்— என்றார். [அ-எ]

## கண்டனங்கள் குறித்து தொண்டா மகிழ்ச்சி

கொழும்பு, டிச. 30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு பல தரப்பிலும் எதிர்ப்பும், கண்டனங்களும் எழுந்துள்ளன. குறிப்பாக பௌத்த மத பீடங்கள் தரப்பில் பெரும் கண்டனக் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

நாட்டின் நலன் கருதி இ.தொ.கா. முன்வைத்திருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து என் மீது சுமத்தப்பட்டுள்ள கண்டனங்கள் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

—இவ்வாறு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மக்கள் தம் நிலைகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். கடல் நீரேரிப் பகுதியில் கடற்படைப் படகு நேற்று மூழ்கடிப்பு!

### ஏழு படையினர் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ்ப்பாண கடல் நீரேரிப் பகுதியில் நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் கடற் புலிகள் நடத்திய தாக்குதலில் ஸ்ரீலங்காப் படையினரின் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது என்றும் அந்தப் படகில் இருந்த ஏழு கடற்படையினரும் கடலில் மூழ்கி மரணமானார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்காப் படையினர் ஐந்து படகுகளில் யாழ். கடல் நீரேரிப் பகுதியில் பிரவேசித்த சமயம், புலிகளின் கடற் பிரிவினர் தாக்குதல் நடத்தினர் என்றும்—

ஒரு படகு மூழ்கியதை அடுத்து ஏனைய நான்கு கடற்படை படகுகளும், அதிவேகமாக அப்பகுதியிலிருந்து தப்பி ஓடிவிட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செப்டம்பர் மாதத்திலும் நயினாதீவுக்கு அண்மையில் கடற் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய நேரடித் தாக்குதல்களில் ஸ்ரீலங்காப் படையின் அதிவேக டோரா படகுகள் அழிக்கப்பட்டன என்பது தெரிந்ததே. [ஓ]

### ஹெலி சூடு

யாழ்ப்பாணம், டிச. 30

யாழ். கடல் நீரேரிப் பகுதியில் நேற்று ஸ்ரீலங்கா கடற்படை படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, அப்பகுதியில் ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதல்களை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## ★ ராஜீவ் கொலை விசாரணை: முன்னாள் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் கைதாவர்!

### பிரபாவுக்கு எதிராகவும் "வாரண்ட்"?

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக தமிழகத்தின் முன்னாள் அமைச்சர்கள் பலரும் கைது செய்யப்படக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் உட்பட மேலும் பலரைக் கைது செய்வதற்கான "வாரண்ட்" உத்தரவும் பிறப்பிக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

"இந்தியா ருடே" ஆங்கில சஞ்சிகையில் "சதி வெளியாகுகிறது" (Conspiracy Surfaces) என்ற தலைப்பில் அநிருத்யா மித்ரா என்பவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி இதழில் வெளியான அக்கட்டுரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

தமிழக அரசின் முன்னாள் உள்துறைச் செயலாளர் ஆர். நாகராஜன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து துரிதமாக பல்வேறு தொடர் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன் முக்கிய கட்டமாக, எவருமே கற்பனை செய்து பார்க்க முடியாத பெரியசதித் திட்டம் ஒன்றைக் கண்டுபிடித்திருப்பதாக [illegible] யாளர்கள் நம்புகின்றனர்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாததால் ஆட்சியில் நீடிப்பதற்கு அரசுக்கு உரிமையில்லை!

### காமினி ஜெயசூரியா "பாய்ச்சல்"

கொழும்பு, டிச. 30

வடக்கு, கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க முடியாத ஸ்ரீலங்கா அரசுக்கு, தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க உரிமையில்லை.

—இவ்வாறு தெரிவித்திருக்கிறார் "சிங்கள தாட்டின் காவலர்கள்" என்ற பேரினவாத அமைப்பின் தலைவர் காமினி ஜெயசூரியா.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சர் தொண்டமான் வெளியிட்டிருக்கும் சமரசத் திட்டத்தைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் வாக்குறுதிகளுக்கு முரணாக உள்ளன என்றும்—

தமிழ் சமுதாயத்தின் நிலையை மேம்படுத்துவதற்காகவே இந்த யோசனை மூலம் திட்டமிடப்பட்டுள்ளது என்றும்—

இது குறித்து அரசாங்கம் அமைதியாக இருப்பது கண்டிக்கத்தக்கது என்றும்— அவர் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ் இந்து P. H. I. 1963 நட்சத்திரம். பூராடம். அழகுள்ள மணப்பெண் தேவை. தொடர்பு: சுவாமியார் இராசகுலசிங்கம், விநாயக திருமண சேவை, 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர் மடம். [19218]

குற்றமற்ற B.Sc. சுவிஸ் 27 வயது மணமகனுக்கும், குற்றமுள்ள சுவிஸ் 32 வயது மணமகனுக்கும் மணப்பெண் தேவை. இங்கு வந்து செய்வர், சீதனம் எதிர்பார்க்கப் படமாட்டாது. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19221]

யாழ்ப்பாண 7 இல் செவ்வாயுள்ள B.Sc. பொறியியலாளருக்கு 20—27 வயதுக்கு இடைப்பட்ட பெண் தேவை. எம்மிடம் ஏராளமான மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [19220]

யாழ். இந்து, 30வயது B.Sc சிவில் பொறியியலாளருக்கு, நட்சத்திரம் பூராடம், படித்த, அழகிய மணமகள் தேவை. செவ்வாய் 7 இல், பாவம் 20, ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. [19213]

யாழ். இந்து, 33வயது சார்ட்டட் எக்கவுண்டன்ட் மணமகனுக்கு நட்சத்திரம்: உத்திரட்டாதி லக்: கேது, கிரக பாவம் 75½, படித்த, அழகிய மணமகள் தேவை. ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப் பந்தி. [19212]

## வகுப்புகள்

கணக்கியல், வர்த்தகம், புதியபிரிவு பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகின்றன. இல 108, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். ஆசிரியர் திரு. K. சத்தியதாசன். [19200]

## புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம், இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது. [19203]

## காணவில்லை

28-12-1991 அன்று சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து கச்சேரி-நல்லூர், றக்கா றோட், கோவில் வீதியால் செல்லும் போது க. இரகுவேந்திரன் [167/8,கோவில் வீதி,நல்லூர்] என்பவருடைய பேர்ஸ் தவறி விட்டது. அதனுள் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியன உள்ளடங்கி உள்ளன. அதனைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி, கண்டிறோட் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி/1169]

## இலக்கியப் பரிசு

1989 ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நூல், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம் பிள்ளை ரூபா. 30. 10 வானொலி நாடகங்கள், ஒரு கட்டுரை. [19219]

## மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதரின் மாணவர் அகராதி' ரூபா 95/- மட்டுமே. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம். [சி/1225]

## திகதி நீடிப்பு

மட்டக்களப்பு, டிச. 30

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரியில் அடுத்த ஆண்டு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பத் திகதி ஜனவரி 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இசை, நடன நூல் கலைத் துறைகளில் ஆர்வமுள்ள மாணவ, மாணவியர், வாய்ப்பாட்டு வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், புல்லாங்குழல் ஆகிய பாடநெறிகளுக்கு இங்கு விண்ணப்பிக்கலாம். (த)

## அதிகரிப்பு

அடுத்த வருடம் ஜனவரி முதல் கொழும்பு வழியாக சேவையாற்றும் சகல சர்வதேச விமான சேவைகளும், எயர்லங்கா நிறுவனமும், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களில் 1.7 வீதத்தை அதிகரிக்கும் என்று விமானசேவை வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை ரூபாவுக்கு எதிராக டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளதன் விளைவாகவே விமானக்கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. [த]

## ஐ. நாவில் ரஷ்யக் கொடி

ஐக்கியநாடுகள் சபையில் முன்னாள் சோவியத் யூனியன் வகித்த இடம் ரஷ்ய சமஷ்டிக் குடியரசுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்பதைக் குறிக்கும் வகையில் ஐ. நா. தலைமையகத்தில் முதன் முறையாக ரஷ்யக் கொடி பறக்கவிடப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை ரஷ்ய அதிபர் திரு. பொரிஸ் யெல்ட்சினிடம் இருந்து கடிதம் ஒன்று ஐ. நா. தலைமைச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து இந்த மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது. (த)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### வேலுப்பிள்ளை இராமலிங்கம்

(இளைப்பாறிய தபாலதிபர்)

தோற்றம்: 29—10—1927 மறைவு: 30—12—1990

ஒளி விளக்காய் காத்த எம் தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் உம் நினைவால் வாழும்;

குறமகள் (மனைவி)
பிள்ளைகள், மருமகன்,
பேரன்.

கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

[4459]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

வீரத் தாயின் மடியில்; 19 — 12 — 1967



வீர மண்ணில்: 10 — 1 — 199[illegible]

செல்வன்

### யோகநாதன் பிரதாபனன்

[மெடிசின் மாஸ்ரர்]

செந்தமிழர் உரிமை மீட்கத் தமிழ் ஈழத்தையே
மீட்கும் பணியில் போரிட்ட – புலிவீரர்
உயிர்காத்து தீரமுடன் செய்திட்ட நிறைபணிகள்
தமிழர் நெஞ்சில் நிறைந்து நிற்க – நாட்டுக்காய்
பலியாகி ஆண்டொன்று சென்றதையா
ஒன்றென்ன நூறாண்டு சென்றாலும் – எம் செல்வமே!
ஆறாது ஆறாது எம்துயர்.

அன்பின்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்கா, தங்கை, தம்பி.

2 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை,

(19167)

---

# கம்பியூட்டர் கல்வி

- BASIC
- d BASE III+
- LOTUS 1-2-3
- WORD STAR 2000+

ஆகிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் தெளிவான முறையிலும், எளிதான வகையிலும் போதிக்கப்படுகின்றன.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்:

03 — 01 — 1992 (வியாழன், வெள்ளி)
04 — 01 — 1992 (சனி, ஞாயிறு)
06 — 01 — 1992 (திங்கள், செவ்வாய், புதன்)

குறிப்பு: O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
விரிவுரைகள் யாவும் தமிழ்மொழி மூலமும் போதிக்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

வடமராட்சியில்:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,**
சரஸ்வதி வாசா,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
(சதா பொன்கடைக்கு முன்பாக)




யாழ். நகரில்:

**யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,**
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1230)

---

# வடக்கு - கிழக்கு பஸ் சேவை இனி அரச அதிபர்களிடம்?

கொழும்பு, டிச. 30

வடக்கு - கிழக்கு மாகாண பஸ் சேவையை நடத்தும் பொறுப்பு அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்படலாம் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரி ஒருவர் இத்தகவலை வெளியிட்டார் என்று அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு பஸ் சேவைகளை இயங்க வைக்க அச்சேவைகள் அரச அதிபர்களிடம் ஒப்படைக்கப்படவிருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

---

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து
முகாம்களில் வாழுகின்ற
**சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக**
தீவக விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்
நடத்தும்

## மாபெரும் இசைநிகழ்ச்சியும் நாடகமும்

உங்கள் அபிமானப் பாடகர்களான

மாவீரர் புகழ் பாடுவோம் .........புகழ்
**ஜெயா சுகுமார்**

ஓ மரணித்த வீரனே ......... புகழ்
**எஸ். திவாகர்**

கொடி பறக்குதடா / பொத்துவில் தொடக்கம் . ...... புகழ்
**சத்தியசீலன்**

ஈழத்து சீர்காழி என அழைக்கப்படும்
**மகேந்திரன்**

★ இவர்களின் பாடல்களுக்கு ★
யாழ். ரமணன், கணேஷ் அவர்களின்
★ இசையமைப்பில் ★

### ★ ராஜன்ஸ் இசைக் குழு ★

வழங்கும் இசை நிகழ்ச்சியும்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய
தலை சிறந்த நாடகக் கலைஞர்களின்

### ★ சந்தனக்காடு ★

நாடகமும் இடம் பெறும்

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
காலம்: 1992 - 01 - 11 ஆம் திகதி சனிக்கிழமை
நேரம்: மாலை 3 மணிக்கு

'' தங்கள் ஆதரவிற்கு எமது நன்றிகள் ''

**விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம், தீவகம்.**

[சி-1170]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு: 27—11—1970

அநியாய அழிப்பு: 30—12—1989



செல்வன்

### விஜயரத்தினம் தேவகுமார்

(அறிவாளி)
(யா / சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவமணி)

படுகொலை செய்து ஆண்டுகள் இரண்டு பறந்தன
பட்டதுன்பம் போக்க பல்லாண்டு சென்றாலும் - முடியாது
படிப்பாய் சாதனை படைப்பாய் என்று - காத்திருந்தோம்
படைத்தவன் பறித்து விட்டான் பாவிகள் நாம் - என்செய்வோம்.
உன் ஆத்மா சாந்தியடைய நித்தம் பிரார்த்திக்கும்;

குடும்பத்தினர்.

71/9 A, தேவகுமார் வீதி,
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

[19192]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# வழமையான பூதம்!

தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதற்கு ஒரு சுமுகமான தீர்வு காணப்படாவிட்டால் இந்த நாடு தொடர்ந்தும் எல்லா வழிகளாலும் சீரழியும். இவ்வாறு தென்னிலங்கையில் பலரும் பேசுவதும், எழுதுவதும் வழக்கம்.

வேறு சிலர், அதற்கும் ஒருபடி மேலாகச் சென்று, யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அதனால் மக்கள் வீணாக மடிகிறார்கள். பாதுகாப்புச் செலவு அதிகரிக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முடியவில்லை. அதன் விளைவாக மக்களின் வாழ்க்கை கஷ்டமாகி வருகிறது — என்று உண்மையை உணர்ந்து கூறுவது உண்டு.

இப்படிக் கூறுபவர்களில், தமிழர்களின் பிரச்சினையை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்று வழி சொல்பவர்கள் மிக மிகக் குறைவு.

ஆனால் இதற்கு மாறாக, அடுத்த சாராரோ, தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படக் கூடாது, அவர்களுக்குச் சில சலுகைகளை மட்டுமே கொடுக்கலாம் என்ற கருத்துடையவர்கள். அவர்கள் தீவிரவாதப் போக்குடையவர்கள்; பேரினவாதிகள். அந்தச் சாரரில் பௌத்த பிக்குமாரும் அடங்குவர்.

பௌத்தத்தைத் தூய்மையுடன் காப்பாற்றுவதற்குப் புத்தர் பெருமான் ஸ்ரீலங்காவைத் தான் தேர்ந்தெடுத்திருந்தார். ஆகவே இந்த நாடு ஒரு சிங்கள - பௌத்த நாடாகவே இருக்க வேண்டும். சிங்களவர் மட்டுமே இந்நாட்டு மக்கள். ஏனைய சகலரும் அந்நியர்கள் — என்ற கற்பனாவாதத்தை உள்வாங்கிக் கொண்ட கூட்டத்தினர் இவர்கள்!

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்தே இந்தக் கருத்தை முன்வைத்து சிங்கள-பௌத்த பேரினவாதம் நிறுவனமயப் படுத்தப்பட்டுள்ளது. அதன் செல்வாக்கும், அதிகாரமும் அரசியலில் மட்டுமன்றி, நிர்வாக மட்டத்தில் மட்டுமன்றி, சகல துறைகளிலும் மிக ஆழமாக வேரூன்றி உள்ளன.

அதன் விளைவாகவே, தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கு முயற்சிகள் நடக்கும் போதெல்லாம், பல்வேறு வழிகளாலும் தடுக்கப்படுகிறது. பண்டா - செல்வா ஒப்பந்தம் தொடக்கம் அற்ப மாவட்ட சபைச் சலுகை வரைக்கும், நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகம் தொடக்கம் ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் வரைக்கும் இதுவே சரித்திரமாக, வழமையாக இருந்து வந்துள்ளது!

அமைச்சர் தொண்டமானின் வடக்கு - கிழக்கிற்கு சுயாட்சி அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற யோசனையைக் கண்டவுடன் தெற்கில் "சிங்கள நாட்டின் பாதுகாவலர்கள் அமைப்பு" தோற்றுவிக்கப்பட்டுள்ளதன் தாற்பரியமும் அதுவேயாகும்! அது வழமையான பூதம்தான்!

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு முட்டுக்கட்டை போடுவதற்குக் காலத்திற்குக் காலம் சிங்கள-பௌத்த பேரினவாதம் என்ற மரத்தில் இருந்து பல புதிய கிளைகள் முளைக்கும். கே. எம். பி. ராஜரத்னா, சி. பி. டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, ஈரியகொல்ல, சிறில் மத்தியு, நெவில் பெர்னாண்டோ போன்ற கடும் போக்காளர்கள் வரிசையைச் சேர்ந்தவரே சிங்கள நாட்டின் பாதுகாவலர்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர் காமினி ஜெயசூரியா.

சிங்கள - பௌத்த பேரினவாதம் ஒழியும் வரை இனப் பிரச்சினை சுமுகமாகத் தீரப் போவதில்லை.

## முன்னாள் அமைச்சர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விசாரணையாளர்கள் சேகரித்துள்ள சாட்சியங்களின்படி பார்த்தால் —

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்துடன் தமிழகத்தையும் சேர்த்து விரிவான ஈழம் ஒன்றை அமைக்கும் பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகவே ராஜீவ் கொலைச் சம்பவம் அமைந்தது என்று சந்தேகிக்கப்படுகிறது.

### ஆழமாக ஊடுருவியது

பல அரசியல் கட்சிகள், மாநில அரசு, மாநில அரசின் பொலீஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆழமாக ஊடுருவியிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் காரணமாக, ராஜீவ் கொலையின் பின்னால் இருந்த சதித் திட்டத்தை நிலை நிறுத்துவதுடன் மட்டும் தற்போதைய விசாரணை நிற்காது என்றும் —

அதற்கு அப்பாலும் வெகு தூரம் செல்லும் என்றும் — தெரிய வருகிறது.

இலங்கைப் பிரிவினைவாதிகள் தொடர்பான இந்தியாவின் அணுகுமுறையில் இது நீண்ட கால விளைவை ஏற்படுத்தக்கூடும்.

### வாரண்ட் பிறப்பிக்கலாம்

குறிப்பாக ராஜீவ் காந்தியை கொல்லச் சதி செய்ததாக விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் திரு. வே. பிரபாகரன், புலிகள் இயக்க புலனாய்வுப் பிரிவுத்தலைவர் பொட்டு அம்மான், இயக்கத் தத்துவவாதி பேபி சுப்பிரமணியம் உட்பட மற்றும் ஏனேயோர் மீது ''வாரண்ட்டுகள்'' பிறப்பிப்பது பற்றி விசாரணையாளர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர்.

அதனைத் தொடர்ந்து இப் போராளிகளை இந்தியாவுக்கு நாடு கடத்தும் கோரிக்கை கொழும்பு அரசுக்கு விடப்படும்.

திரு. பிரபாகரனுடன் அரசியல் ரீதியில் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு முயற்சி செய்யும் ஜனாதிபதி பிரேமதாசாவின் நடவடிக்கையில் இது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும்.

விசேட விசாரணைக் குழு தயாரித்து வரும் குற்றப்பத்திரிகையில், ராஜ்யசபை உறுப்பினர் ஒருவர், முன்னாள் மாநில அமைச்சர்கள் மற்றும் முன்னாள் மாநில எம். எல். ஏக்கள் உட்பட பல அரசியல்வாதிகள் கூட்டு எதிரிகளாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரைத் தமிழ்நாடு பொலீஸின் 'கியூ' பிரிவினர், பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யவும் ஆரம்பித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கனவான ''விரிவான ஈழம்'' பற்றி இந்த அரசியல்வாதிகள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தனர் என்று அவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

### கடிதங்கள் தரும் தகவல்

ஆனால் விடுதலைப் புலிகளின் இந்த அதிசயமான பார்வைக்கு (Wonderful Vision) அரசியல் வாதிகள் மட்டும் பலியாகவில்லை.

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு அமைப்பினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவியிருந்தனர். தமிழ்நாடு அரசின் புலனாய்வுத் திணைக்களத்தையும் விடுதலைப் புலிகள் விட்டு வைக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் மறைவிடங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட பல கடிதங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன் மட்டும்தான் சந்தேகத்துக்குரிய சிரேஷ்ட அதிகாரியல்லர். மாநில அரசின் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள் சிலரும் இந்த இரட்டை வேட விளையாட்டில் அகப்பட்டிருந்தனர் என்று விசேட புலனாய்வுக்குழு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் கெரில்லா இயந்திரம் எப்போதும் தடையின்றிச் செயல்பட்டுக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதில் சில அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் செயல்பட்டனர் என்பது தெரியவந்திருப்பதாகவும் விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.

### தப்ப விடமாட்டோம்

'கியூ' பிரிவு அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:

''ஏராளமான தகவல்கள் எம்மிடம் உள்ளன. அவை எமது பரிசீலனையில் உள்ளன. தப்பமுடியாத அளவு சாட்சியங்களிருப்பின் அவர் எந்த உயர் நிலையிலிருந்தாலும் எவ்வளவு வலிமை பெற்றவராக இருந்தாலும் நாம் விடமாட்டோம்'' — என்றார்.

விடுதலைப் புலிகளின் இந்திய நடவடிக்கைகளுக்கு பிரதம கட்டுப்பாட்டாளராக இருந்தவரும், கைது செய்யப்படுவதைத் தவிர்க்க திருச்சியில் வைத்துத் தற்கொலை செய்து கொண்டவருமான சாந்தனுக்கு —

புகலிடம் கொடுத்ததாகக் கூறப்படும் முன்னாள் மாநில தி. மு. க. அமைச்சர் ஒருவரை தமிழக பொலீஸின் 'கியூ' பிரிவினர் தேடிக்கொண்டிருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

### வேகமான விசாரணை

ஆகவே விசாரணை முழு வேகத்தில் தொடருகிறது. விடுதலைப் புலிகளின் முக்கிய சர்வதேசத் தொடர்புகளைக் கண்டுபிடித்து குலைப்பதையே மையமாக வைத்து விசாரணைக் குழு செயற்படுகிறது.

விடுதலைப் [illegible] தாகத் தெரிய[illegible] தகவல்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இன்றும் நாளையும்

# குடாநாட்டின் பல்வேறு இடங்களில் தமிழீழ மீட்பு நிதி செலுத்த வசதி

இன்றும் நாளையும் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் தமிழீழ மீட்பு நிதி திரட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மீட்பு நிதி செலுத்துவதற்கான பிரிவு, இடம் மற்றும் நேரங்கள் வருமாறு:-

### இன்று

★ சாவகச்சேரி வட்ட அவை;- சாவகச்சேரி மகளிர் கல்லூரி — காலை 9.30 முதல் மு. ப. 11.30 வரை.

★ கொடிகாமம் வட்ட அவை;- கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி - பி. ப. 1.30 முதல் பி. ப. 2.30 வரை.

★ பச்சிலைப்பள்ளி:- பளை ம. வி. — பி. ப. 3.30 முதல் மாலை 4.00 வரை.

### நாளை

★ கோப்பாய் உ. அ. அ. பிரிவு:- நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி — காலை 9 மணி முதல் மு. ப. 10.30 வரை.

★ உடுவில் உ. அ. அ. பிரிவு:- மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி — மு. ப. 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.

★ சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவு:- சண்டிலிப்பாய் ம. வி. [இராசா பாடசாலை] — பி. ப. 1.30 முதல் பி. ப 2.30 வரை.

★ சங்கானை உ. அ. அ. பிரிவு:- வட்டு இந்துக் கல்லூரி பி. ப. 3.00 முதல் 4.00 வரை.

★ காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரிடமிருந்து நாளை பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் மீட்பு நிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. [உ]

## நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம்

# வடக்கு - கிழக்கு இணைப்பை தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தும்

கொழும்பு, டிச. 30

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் தமிழ்க் கட்சிகள் தமது யோசனைகளை தனித்தனியாக முன் வைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் - வடக்கு - கிழக்கு இணைப்பை அனைத்து தமிழ் கட்சிகளும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வலியுறுத்தும் என்றும் —

இதற்கான இணக்கம் தமிழ் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதேவேளை —

வடக்கு - கிழக்கில் யுத்த நிறுத்தம் கொண்டுவரவேண்டும் என்ற பிரேரணை நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுமா என்ற கேள்வியும் இப் பத்திரிகைச் செய்தியில் எழுப்பப்பட்டிருக்கிறது. [த-எ]

## அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

# சந்திரிகாவை வேட்பாளராக்க சு. க. உறுப்பினர்கள் வலியுறுத்து

கொழும்பு, டிச. 30

அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுதந்திரக்கட்சியின் சார்பில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்று அக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் வலியுறுத்துவதாகத் தெரியவருகிறது.

தமது தாயின், அனுபவம், வழிகாட்டல் மற்றும் கீழ்ப் படிவு போன்றவற்றில் தமது சகோதரர் அனுரா பண்டாரநாயக்காவைவிட, சந்திரிகா சிறந்து விளங்குகிறார் என்று கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் இடம் பெறும் பட்சத்தில் போட்டியிட லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோருக்கு அடுத்தபடியாகவே அனுரா பண்டாரநாயக்காவைக் கருத, தீர்மானம் எடுக்க இருப்பவர்கள் முற்படுவதாகத் தெரியவருகிறது. [த-எ]

## புதிய பொதுநல அமைப்பின்

# பொது இராணுவப் படையில் சேர மூன்று குடியரசுகள் மறுப்பு

மாஸ்கோ, டிச. 30

புதிய சுதந்திர பொதுநல அமைப்பின் பொது இராணுவ படையில் தாங்கள் சேரப் போவதில்லை என்று உக்ரைன், அஸர்பைஜான் மற்றும் மோல்டேவியா ஆகிய குடியரசுகள் கூறிவிட்டன.

தங்களுக்கென தனிப்பட்ட இராணுவத்தை அமைக்கப் போவதாகவும் இம் மூன்று குடியரசுகளும் தெரிவித்துள்ளன. புதிய பொதுநல அமைப்பின் உயர் இராணுவ அதிகாரிகளிடையே நடந்த இரண்டு நாள் பேச்சுகளின் போது இம்மறுப்பு வெளியிடப்பட்டது.

பாதுகாப்புக் கொள்கை குறித்து சமரசம் காணுவதற்காக இன்று திங்கள் மின்ஸ்க் நகரத்தில் 11 குடியரசுகளின் தலைவர்கள் பேச்சுகள் நடத்துவர். அப்போது இக் கருத்து வேறுபாட்டைத் தீர்க்க முயற்சிக்கப்படும் என்று புதிய பொதுநல அமைப்பின் தற்காலிக இராணுவ தளபதி மார்ஷல் ஷெபர்ஷிக்கோவ் கூறினார்.

இதனிடையில் — முன்னாள் சோவியத் யூனியனின் அணு ஆயுதங்களை ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு உக்ரைன் குடியரசு வன்மையான எதிர்ப்பை தெரிவித்திருக்கிறது. (த-எ)

## தமிழகத்தில் அவசரக் கூட்டம்

சென்னை, டிச. 30

கர்நாடகத்தில் இருந்து தமிழர்கள் அகதிகளாக தொடர்ந்து வருவது பற்றி ஆராயுமுகமாக தமிழக மாநில அமைச்சரவையின் அவசரக் கூட்டம் இன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் நடைபெறுகிறது. [அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹணவின் குடும்பத்தை விடுவிக்க ஜே. வி. பி. தலைவர் கோரிக்கை

லண்டன், டிச. 30

கொலையுண்ட ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜயவீரவின் மனைவி, பிள்ளைகள் மற்றும் ஜே. வி. பி. உறுப்பினர்களின் உறவினர்கள் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் குற்றம் இழைக்காதவர்கள். இவர்களை விடுவிக்க வேண்டும்.

வெளிநாடு ஒன்றில் தலைமறைவாக வாழ்ந்து வரும் ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க பி. பி. ஸி. சிங்கள சேவை ஊடாக இத்தகைய கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்திருப்பதாவது:

ரோஹணவின் மனைவியும், பிள்ளைகளும் முகாம் ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அந்தப் பிள்ளைகளுக்கு கல்வி வசதி ஏதும் செய்து கொடுக்கப்படவில்லை.

எவ்வித குற்றமும் இழைக்காத இவர்களைக் கைது செய்தது ஏன் என நான் ஜனாதிபதி பிரேமதாசவிடம் கேட்கிறேன்.

ஜே. வி. பி. உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களைக் காப்பாற்றவும் அவர்களுக்கு வாழ்வளிக்கவும் எமது சகோதர மக்கள் தயாராக உள்ளார்கள்.

அவர்களை நாம் சொல்லும் இடத்துக்கு, நாம் சொல்லும் நாட்டுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அனுப்பி எம்மிடம் அவர்களை கையளிக்க வேண்டும்— என்றார். [ஒ-10]

# பாடப் புத்தகங்கள் கப்பலில் வரும்

கொழும்பு, டிச. 30

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குரிய பாடப் புத்தகங்களை கப்பல்களில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தார் என்று கொழும்புபத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

சுமார் இரண்டு லட்சம் மாணவருக்குரிய 250 தொன் நிறையுள்ள புத்தகங்களை கப்பலில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்க கல்வி அமைச்சு, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு ஆகியன கூட்டாக நடவடிக்கை எடுத்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

மன்னார் மாவட்டத்திற்கான புத்தகங்களை கற்பிட்டி வரை லொறிகளில் கொண்டு சென்று அங்கிருந்து படகுகள் மூலம் கொண்டு செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வெற்றிடம்

### யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

மேற்படி பாடசாலையில் கீழ்வரும் பதவிகளுக்கு அமைய ஊழியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

* நூலகர் (பெண்)
  [நூலகப் பயிற்சி நெறி பயின்றவர்]
* அலுவலக ஊழியர் (பெண்)
* மைதானத் தொழிலாளி (ஆண்)

வயதெல்லை : 20 — 35 வரை

விண்ணப்ப முடிவு திகதி : 06 - 01 - 1992

அனுப்ப வேண்டிய முகவரி :
அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சை : 11 - 01 - 92 சனிக்கிழமை
காலை 9-00 மணி.

அதிபர்
(யாழ். இந்து மகளிர் கல்லூரி)

(சி/1171)

## வீக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

புலமைப் பரிசில்
ஆண்டு 5

புதிய பிரிவு ஆரம்பம்: 4 - 1 - 1992

பிரிவு 1 — கிழமை நாட்கள் 4-00 பி. ப.
பிரிவு 2 — சனி, ஞாயிறு: 2 00 பி. ப.

★ பயிற்றப்பட்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் போதிக்கப்படுகிறது.
★ இலவச பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்.
★ அச்சிட்ட குறிப்புக்கள் வழங்கப்படும்.
★ அனுமதிகளை பெற்றோர்கள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

[சி-1227]


# சீனாவும் கைச்சாத்திடும்

மணிலா, டிச. 30

அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட சீன நாடாளுமன்றம் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது.

சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழு மேற்கொண்ட இம்முடிவினால் பெரிய வல்லரசுகளில் கடைசி நாடாக சீனாவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் சாத்தியமாகியுள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர். [அ-10]

# ஊறணியிலும் சண்டை

கொழும்பு, டிச. 30

மட்டக்களப்பு மாவட்டம் - ஊறணிப் பகுதியிலும் ரோந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் ஒன்று இடம்பெற்றது என்று கூறப்பட்டது. [உ-எ]

# கைது

கொழும்பு, டிச. 30

தென் மாகாணத்தைச் சேர்ந்த ஜே. வி. பி. இயக்கத் தலைவி என்று சந்தேகிக்கப்படுபவர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை காலி பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

தென்மாகாணத்தில் ஜே. வி. பி இயக்கக் கிளைகளை அமைப்பதில் அவர் ஈடுபட்டிருந்தாராம்.

# ஆட்சியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் —

பாதுகாப்புப் படையில் தமிழ்ப் போராளிகளைச் சேர்த்துக்கொள்வதற்காகத்தான் இம்முயற்சியைத் திரு. தொண்டமான் மேற்கொண்டுள்ளார் என்று பௌத்த மத அமைப்பு ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது. (உ-எ)

# கண்டனங்கள்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்தக் கூடிய ஜனநாயக அமைப்பைக் கொண்டு வருவதற்காகவே தாம் பாடுபடுவதாகவும் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

தாம் அமைச்சர் என்ற முறையில் அல்லாமல் இ. தொ. கா. தலைவர் என்ற முறையில் தாம் முன்வைத்துள்ள யோசனைகளை விடுதலைப் புலிகள் கவனமாகப் பரிசீலனை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [ஒ-எ]

# இனக்கலவர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து இலங்கையைத் துண்டாடுவதற்கான திட்டமே தொண்டமானின் யோசனை என்றும் அவை இனத்துவேசத்தைத் தூண்டி வருகின்றன.

இனத்துவேசம் உச்சமடையும் கட்டத்தில் தெற்கில் தமிழருக்கு எதிரான இனக்கலவரம் மூளலாம் என அஞ்சப்படுகிறது.

இதே வேளை, மலையகப் பகுதிகளில், புலிகள் ஊடுருவுவதாகக் கூறி, இராணுவத்தினரும், பொலீஸாரும் அப்பகுதி இளைஞர்களைக் கண்டபடி கைது செய்கின்றனர். அவ்வாறு கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கான மலையக இளைஞர்களில் பலர் மாயமாக மறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அமைச்சர் தொண்டமான் எடுக்கும்முயற்சிகளைத் தடுக்கும் விதத்தில் அவருக்குச் சங்கடம் கொடுக்கும் முகமாகவே மலையக [illegible] சொல்லப்படுகிறது. [அ]

# பதக்கப் பட்டியல்

'சாவ்' விளையாட்டுப் போட்டிகளில் நேற்று இரவு வரை நாடுகள் பெற்ற பதக்கங்களின் விவரம் வருமாறு:-

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இந்தியா | — 59 | 54 | 33 |
| இலங்கை | — 41 | 30 | 40 |
| பாகிஸ்தான் | — 27 | 31 | 22 |
| பங்களாதேஷ் | — 02 | 08 | 28 |
| நேபாளம் | — 03 | 05 | 28 |

# யாழ். நகர் நோக்கி ஷெல்

யாழ். நகரை நோக்கி நேற்றிரவு ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த ஷெல் பலாலியில் இருந்து ஏவப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

அதே சமயம் மண்டைதீவுப் பகுதில் இருந்தும் இரவு 8-30 மணியளவில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இரு ஷெல்கள் சாவகச்சேரிப் பக்கமாகக் கூவிக்கொண்டு சென்றதாகக் கூறப்பட்டது. [ஒ]

# களுவன்கேணியில் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவன் கேணி மற்றும் ஒந்தாச்சிமடம் ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

களுவன்கேணிக் கிராமத்தைச் சுற்றி வளைத்த படையினரும், சமூக விரோதக் குழு ஒன்றும் தமிழ் மக்களைச் சித்திரவதைகளுக்கு உட்படுத்தி, பின்னர் 20— 30க்கும் இடைப்பட்ட வயதினரை தெரிந்தெடுத்து அவர்களில் சிலரை கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

செல்லையா குமாரசூரியர், செல்லையா பேரின்பராஜா, வைரமுத்து சின்னையா, மாணிக்கவேல் சபா, வசந்தன், செல்லத்தம்பி முருகுப்பிள்ளை ஆகியோரே களுவன் கேணியில் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். (ஒ)

# முன்னாள் அமைச்சர்...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனுப்பும் வேலையை மத்திய புலனாய்வுக் குழு ஆரம்பித்துள்ளது.

பணம் மற்றும் ஆயுதக் கொள்வனவு முதலியனவற்றைக் கையாளுகின்றவரும் — சுவிட்சர்லாந்தில் இருந்து செயற்படுபவருமான மிக முக்கிய விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரை விசேட புலனாய்வுக் குழு, இன்னொரு பக்கத்தில் தேடுகிறது.

பனாமா, சைப்பிரஸ், ஹொண்டூரஸ் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இருந்து செயற்பட்ட ஆயுத வியாபாரிகளுக்கு பி. சி. சி. ஐ. வங்கியின் லண்டன் மற்றும் கேய்மன் தீவுகள், பனாமா, பிராங்பர்ட் ஆகிய கிளைகள் மூலமும் சிங்கப்பூரில் உள்ள வங்கி மூலமும் ஒழுங்காகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வந்ததும் தெரிய வருகிறது.

விசேட புலனாய்வுப் பிரிவினர் இந்த நாடுகளுக்கும் விஜயம் செய்து விசாரணை நடத்தவிருக்கின்றனர் —

— இவ்வாறு அநிருத்யா மித்ரா தமது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.


## அந்தியேட்டி அழைப்பிதழ்



அமரர்
### ந. பழனிச்சாமி

அமரர் திரு. ந. பழனிச்சாமி அவர்களின் வீட்டுக் கிரிகை 31-12-91 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினரும்
உறவினர்களும்

115, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம். [1899 1]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 12 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org